
செல்வராணி நடராஜா
சகோதரச் செல்வங்கள்
23. 4. 2014



Dear Akka,

In1955, you were in the Peradeniya University when pappa expired all of a sudden. He suffered a coronary thrombosis. You were the eldest in the family and I was five years younger to you and I was studying for my GCE Adv.Level. We had one sister and four brothers younger to us. So I decided to go for employment; Amma was not in favour. Somehow I convinced her and found a job in the Health Department and received monthly salary from the date of appointment even during my training period. Other sister and brothers were very small. I was stationed in Colombo and you were in Peradeniya. After graduating you found teaching appointment at St. Agnes Convent, Matale. From Colombo, I came to the University with Amma and Ravi for your Convocation.
After marriage, your family and my family met frequently because you were living in Matale and I was living in Colombo. You have four children and I have two. The children were very much attached to each other.

In the later stages, before you migrated to Canada ,we were living in Colombo at Anderson flats A2 and A5. Amma too came to Colombo and stayed with us. In 1992 you migrated to Canada with your family. After migration, you came to Sri Lanka almost every year to see Amma and us. After Amma's death, though you have not visited Sri Lanka, we communicate with each other over the phone and skype .

**WE WISH YOU A VERY HAPPY 80TH BIRTHDAY!**



With Love,
Ganeshan, Ranee, Eesan, Ramani,
Thulan, Sujani, Nilavan and Agnijan.

## எங்கள் அக்கா! ஓராயிரம் அம்மா

ஒரு கொடி பூத்தெடுத்த ஏழு மலர்கள் நாங்கள். அந்த ஏழு மலர்களில் முதல் மலராய் நீங்கள் பூத்தீர்கள். அந்த மலர் மணத்தை நான் மறக்கவில்லை. மறப்பதற்கும் நான் விரும்பவில்லை. சித்திரை 23ல் பிறந்து எண்பதில் காலடி பாதிக்கும் என் அக்காவுக்குப் பிறந்ததின நல்வாழ்த்துக்கள். இவ்வாறு வாழ்த்துக் கூறும் நானும் ஒரு பூ. குலவிளக்காய், அன்பின் இருப்பிடமாய், பொறுமையின் சிகரமாய் உள்ளவர் என் அக்கா. கதைக்கும்போதுகூட ஒரு கனிவு. ஆறுதலான வார்த்தை. இப்படியான ஒரு உடன்பிறப்பு (அக்கா) கிடைத்திருப்பதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

1971ம் வருடம் நான் மாத்தளைக்குப் போய் அக்கா பிள்ளைகளுடன் இருந்த காலத்தில் அக்கா எனது தையல் ஆர்வத்தைத் தெரிந்து ஒரு பெண்மணி மூலம் லேஸ் பின்னுவதற்குக் கற்பித்துத் தந்தா. அக்கா ஓய்வாக இருக்கும் நேரங்களில் எனக்கு அலங்காரத் தையல் கற்றுத் தந்தீர்கள்.
இவற்றை எல்லாம் அன்றும் இன்றும் நினைத்து நினைத்து சந்தோஷப்படுகிறேன்.
அக்காவுடனும் பிள்ளைகளுடனும் நான் என்னை மறந்து சந்தோஷமாக இருந்த நாட்கள் மீண்டும் வராதா என்று இன்றும் மனம் ஏங்குகிறது. அக்காவின் வாழ்நாட்கள் நூறையும் தாண்டிப் பலவருடங்கள் வாழ நான் இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.



நன்றி.

புஷ்பம்.

**நினைவூட்டல் மறந்ததால்தானே நினைவூட்டுவதற்கு?**
**இது இரைமீட்டல்!!!**

| ஆண்டு | சம்பவம் |
| --- | --- |
| 1946/1947 | வீட்டில் மா இடித்துக்கொண்டிருப்பார்கள். நான் அங்கு பாந்தி பாந்தி நடந்து வருவேன். என்னைக் கண்டவுடன் என்னைத் தடுப்பதற்கு அம்மா அக்காமார் தம்மைத் தயார்படுத்திக் கொண்டு “தம்பி வாறான் ம (மானா) ண்ண (ண்ணன்னா) போடப்போறான் கவனம்” என்பார்கள். அதைகேட்டவுடன் நானும் மண் அள்ளிக்கொண்டு மா இடிக்கும் இடத்திற்கு செல்வேனாம். அவர்கள் என்னை தடுத்து நிறுத்தி விடுவார்களாம். இது என் குறும்புத்தனம் அல்ல குளப்படி? அட்டகாசம். |





| | |
| --- | --- |
| 1962 | நான் பாவித்த முதலாவது வாகனம் அக்கா எனக்கு வாங்கித்தந்த புதிய *Raleigh Bicycle.* |
| 1963 | அக்காவின் திருமணத்தன்று என் அழைப்பிற்கிணங்க சமூகமளித்த என் சக மாணவர்கள் சாப்பிடும் பொழுது “யார் கூடச்சாப்பிடுவது” என்று போட்டி வைத்து பந்தி நடத்தியவர்கள் பிரமிக்கும் அளவிற்கு நிறைய சாப்பிட்டு அசத்தினார்கள். இரண்டு மாதங்களுக்கு முன் என் நண்பர் ஒருவர் இதை நினைவூட்டினார். இது 50 வருடங்களுக்கு முன் நடந்த ஓர் சிறிய சம்பவம். இதை என் நண்பன் எனக்கு நினைவூட்டியது எனக்கே ஆச்சரியமாகவிருந்தது. |



இச்சந்தர்ப்பத்தில் இள வயதில் தந்தையை இழந்த எம்மை அம்மாவுடன் சேர்ந்து எம்மை நல்வழிப்படுத்தி சிறந்த முறையில் வளர்த்தெடுத்த அன்பான அக்காவிற்கு என்சார்பிலும் மற்றைய சகோதரர்கள் சார்பிலும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.



அக்கா சுகதேகியாக சந்தோஷமாக நிம்மதியாக இன்னும் பல வருடகள் சிறப்பாக வாழவேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.



*ஜெயா, அனி, சுமி, பாலா, லனியுடன் சேர்ந்து அக்காவிற்கு எமது அன்பான பிறந்ததின வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.*

## அக்கா வாழ்க வளமுடன்

நான் சிறிய வயதில் சரியான குழப்படி. வீட்டிலிருந்த தோடம் பிஞ்சுகளைப் பிடுங்கி 'சங்கதி விளங்கியவர்' என்ற பெயரைப் பெற்றேன். அண்ணாவைக் கத்தி கொண்டு கலைத்தேன். அண்ணாவுக்கு கல்லால் எறிந்து மண்டை உடைத்தேன். இப்படிப் பல குழப்படிகளுக்கு ஒரிரு அடிகள் அக்காவிடம் வாங்கினேன். கூடுதலாக அவர் தரும் தண்டனை வீட்டின் வெளி விறாந்தையிலுள்ள தூணின் கீழ் இருப்பதுதான்.அடி வாங்குவது பிரச்சினை இல்லை இரண்டு நிமிடத்துள் வலி மறைந்துவிடும். தூணின் கீழ் இருப்பதுதான் நரக வேதனை.

இப்படியான புதுவிதமான தண்டனை தந்து என்னை நல்லவனாக்கிய அக்காவிற்கு இன்று 80 ஆவது பிறந்தநாள். அவர் நூற்றாண்டு காலம் நோய் நொடியின்றி வாழ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.



அன்பின் தம்பி

பாலா.

அன்புள்ள அக்கா,

உங்கள் 80வது பிறந்த தினத்தை இனிதே கொண்டாட எங்கள் அன்பான பிறந்தநாள் வாழ்த்துக்கள். உங்கள் பிறந்ததினத்தில் அன்று நான் 5ம் வகுப்பிலோ 6ம் வகுப்பிலோ இருக்கும் போது நீங்கள் பல்கலைக்கழக மாணவி; விடுமுறைக்கு வருவீர்கள். எங்களுக்கும் விடுமுறை. எங்கள் வயதிற்கேற்ப குழப்படி பெரியவர்களால் தாங்கமுடிவதில்லை. அம்மா, "தங்கச்சி இவன் நேசனைப் பார், ரவியைப் பார், பாலாவைப் பார்" என்று சொல்ல, நீங்கள் நேசா நீர் போய் வெளிவாங்கில் 1 மணிநேரம் இருக்கலாம், பாலா நீர் உள்ளே, ரவி கடைகுட்டி சில சலுகைகள்; தண்டனையின் போது குழப்படி செய்தால் வெளிவிறாந்தையில் உள்ள யன்னலின் பித்தளைக் கம்பிகளை பிறாசோ போட்டுத் தேய்க்க வேண்டும். அதனையும் விரைவாகச் செய்தால் தண்டனை குறையும். சில சமயம் ஏன்தான் இந்த விடுமுறை வந்ததோ என்று நினைக்கத் தோன்றும். இப்படி ஒரு நாள் மாலை நான் அன்னலட்சுமி அக்கா வீட்டில் இருந்த மீன் தொட்டியில் மீன் பிடித்து அகப்பட்டுக்கொண்டேன். அப்போ முற்றத்தில் இருந்த கிழுவந்தடியால் அடிவாங்கியது இப்போது நினைத்தாலும் ஆச்சரியமும் சிரிப்பும் வரும். G.C.E. O/L எடுத்து சித்தியடையாமல் இருந்தபோது, குழப்படி கூடினால் மாத்தளைக்கு அனுப்பிவிடுவா அம்மா. அங்கும் அதிக காலம் நீடிக்காது – இனிமேல் குழப்படி செய்ய மாட்டேன், படிப்பேன் என்று உறுதி கூறி கொக்குவிலுக்கு வந்து விடுவேன். மீண்டும் தொடர்கதைதான்.

பிறந்தநாள், தீபாவளி, வருஷம் என்று மாத்தளையில் இருந்து பாசல் வரும். இப்போதும் பசுமையாக நினைவில் நிற்கின்றது. 1967ம் ஆண்டு அகிலா பிறக்க எதிர்பார்த்துக் காத்திருந்த போது ஒரே மழை, வீட்டைச்சுற்றி வெள்ளம். உடனே அம்மா இரண்டு வாங்கைப் பாலமாக அமைத்து அதில் அக்காவை நடக்க வைத்து முத்துப்பிள்ளை மாமி வீட்டை அம்மாவும் சின்னக்காவும் கூட்டிச் சென்றது, இப்படி எத்தனையோ மறக்கமுடியாத பசுமையான நினைவுகள். எழுதிக்கொண்டே போகலாம். அன்பான அக்கா எங்களுக்குக் கிடைத்ததில் மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும்.

இன்னும் பல்லாண்டு காலம் நீங்கள் வாழ வேண்டும், பசுமையான நினைவுகளுடன் நாங்கள் என்றும் உங்களை மறக்காமல் இருக்க வேண்டும். நீங்கள் நல்ல உடல் நலத்துடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.


அன்புடன்,
- நேசா



எனக்கு இரண்டு வயதாக இருக்கும் பொழுதே பப்பா எம்மை விட்டு பிரிந்துவிட்டார். அதன்பின் அம்மாவுடன் சேர்ந்து அக்காமார் தான் என்னை வளர்த்தெடுத்தார்கள். என்னை முறையாக வளர்த்தெடுப்பதற்கு முதல் ஐந்து வருடங்கள் அம்மாவிற்கும் உங்களுக்கும் நிறைய கஷ்டங்கள் தந்திருப்பேன். அவை எல்லாவற்றையும் தாண்டி சிறந்த முறையில் என்னை வளர்த்தெடுத்தீர்கள். ஆகையாற்றான் நான் இன்னமும் சுகதேகியாக வாழ்கின்றேன் என்பதை நான் நன்றியறிதலுடன் கூறுகின்றேன்.



நீங்கள் எனக்குத் தந்த பொறுப்பு நீங்கள் கட்டிய வீட்டை நான் மேற்பார்வை செய்து சிறந்த முறையில் வீட்டைக்கட்டி முடித்தோம். வீடு கட்டுதல் எவ்வளவு பொறுப்பான காரியம் என்பதை உணர்ந்து கொண்டேன். சிறு வயதில் நான் சிறந்த ஆடைகள் தரித்து வெளியே சென்றால் அத்தான் “Mr·Kokuvil” என்று என்னை பகிடி பண்ணுவார்.
அதன்பின் என் உத்தியோகம் ஆசிரியர் பூண்டுலோயாவில் பின் பிரத்தியேக வகுப்பு நடத்தியது. பின் என் திருமணம் அதிலும் அம்மா அக்காமாரின் பங்களிப்பு நிறைய உண்டு. எம்மை நல்வழிப்படுத்திய அம்மா அக்காமாருக்கு என் நன்றியை தெரிவிக்கின்றேன். அக்கா இன்னும் நீண்டகாலம் சுகமாய் சந்தோஷமாய் நின்மதியாக வாழவேண்டும் 80ம் பிறந்த தினத்தன்று வாழ்த்துகின்றோம்.



*Happy 80th b’Day*
*Ravi, Vathsalaa & Khanesh*



